இரண்டாயிரம் பேருக்குத்தான் வழங்க வேண்டும். அதற்கும் உத்தரவிடுமாறு பணிவோடு வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த அளவிற்கு எனக்கு நேரம் ஒதுக்கி, நான் பேசியதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என்ன அரசன்?*

திரு. ப. அரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஜெ.வீ. அவர்களிடத்திலே முடிக்கிறபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறித்து ஒரு பாடலைச் சொல்லி முடிக்குமாறு சொன்னேன். அவர்கள் மறந்துவிட்டார்கள். அந்தக் கடமையை இப்போது நான் செய்ய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பாடப் போகிறீர்களா?*

திரு. ப. அரசன்: *என்ன பாடல் என்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்களே, "நீங்கள் நல்லா இருக்கணும் நாடு முன்னேற இந்த நாட்டிலுள்ள ஏழைகளின் வாழ்வு முன்னேற" (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பாடலை பாடச் சொன்னேன். அவர் பாடாமல் இருந்ததால் அதைப் பாட விரும்பினேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மங்களகரமாக முடித்த அரசனுக்கு நன்றி. பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19–01–2006) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 1–32 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

16. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

[2006 ஜனவரி 18

17. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

18. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

19. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்தி ஆறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

* * * * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS